நம் முதலமைச்சர், மகளிருக்கான திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார்!

# தமிழ்நாடு என்று சொன்னாலே, ‘மகளிர் நாடு’ என்று ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டிப் பேசுகிறது!

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கள்ளக்குறிச்சி, மார்ச் 17 -**

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நடைபெற்ற அரசு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு 25 ஆயிரம் பயனாளிகளுக்கு, ரூ.116.24 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**இந்த நிகழ்ச்சியின்போது, ரூ.34 கோடி மதிப்பில் நிறைவுபெற்றுள்ள 758 புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்ததுடன், புதிய கட்டடங்களை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து, ரூ.81 கோடி மதிப்பில் 1740 புதிய பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டினார்.**

**நிகழ்ச்சியில் பேசிய அவர், ``இன்று தமிழ்நாடு என்று சொன்னாலே, `மகளிர் நாடு’ என்று ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டிப் பேசுகிறது. அந்த அளவுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார்” என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

இன்று இந்த அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் உண்மையாகவே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பாராட்டுகள் வாழ்த்துகள்

கள்ளக்குறிச்சி மாவட்டம் என்று சொன்னாலே, உழைக்கின்ற மக்கள் அதிகம் இருக்கக்கூடிய மாவட்டம் கள்ளக்குறிச்சி. உங்களின் அன்புக்கும் பாசத்துக்கும் எதுவுமே ஈடாகாது. அப்படிப்பட்ட உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணன் உதயசூரியன் அவர்களுக்கும், அண்ணன் `வசந்தம்’ கார்த்திகேயன் அவர்களுக்கும், அண்ணன் மணிக்கண்ணன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் அதாவது இரண்டே நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. இரண்டே நாட்களில் இவ்வளவு சிறப்பாக, இவ்வளவு பயனாளிகளுக்கு இவ்வளவு திட்டங்களை ஏற்பாடு செய்த உங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் மீண்டும் பயனாளிகளின் சார்பாக என் நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வெற்றிக்கு எடுத்துக்காட்டு

இங்கே திரண்டிருக்கக்கூடிய மக்கள் உங்களின் அன்பு, உங்களின் மகிழ்ச்சிதான் நம் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றிக்கு ஒரே எடுத்துக்காட்டு, ஒரே சாட்சி, ஒரே உதாரணம். இன்று இந்த அரங்கத்தில் இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொள்ள பயனாளிகளாக, பங்கேற்பாளர்களாக வந்திருக்கிறீர்கள். அதிலும் இந்த அரங்கத்தில் ஆண்களை விடப் பெண்கள் அதிக அளவில் வந்திருக்கிறீர்கள். அதனால்தான் இன்று தமிழ்நாடு என்று சொன்னாலே, `மகளிர் நாடு’ என்று ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டிப் பேசுகிறது. அந்த அளவுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாள் முதலமைச்சரான உடனே அவர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம், உங்களுக்கான கையெழுத்து. இந்த ஐந்து ஆண்டுகளில் விடியல் பயணம் திட்டத்தில் 920 கோடி பயணங்களை மகளிர் நீங்கள் மேற்கொண்டுள்ளீர்கள். இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் சுமார் 12 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளீர்கள்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

அடுத்து பள்ளிக்கூடம் செல்கின்ற பிள்ளைகளுக்கு, குறிப்பாகத் தாய்மார்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மிகப்பெரிய அளவில் உதவி செய்துள்ளது. இன்று இந்தத் திட்டத்தைப் பல்வேறு நாடுகள், பல்வேறு மாநிலங்கள், இலங்கை, கனடா போன்ற வெளிநாடுகளும் இன்று இந்தத் திட்டத்தைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளன. ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் 22 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். காலையில் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குச் சென்றால், முதலில் தரமான உணவு, அதன் பிறகு தரமான கல்வி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் சுமார் 47,000 குழந்தைகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகள், பெண் பிள்ளைகளாக இருந்தால், புதுமைப்பெண் திட்டம், ஆண் பிள்ளைகளாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டம். ஒவ்வொரு மாதமும் கல்வி ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் இந்த இரண்டு திட்டத்தின் மூலம் 27 ஆயிரம் மாணவமாணவிகள் பயன்பெற்றுள்ளனர். `நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக 49 லட்சம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்று மாநிலம் முழுவதும் 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினித் திட்டத்தையும் அமல்படுத்தி, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.


### ஒரு கோடியே 32 லட்சம் மகளிர்

இவை அனைத்துக்கும் மேலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் இன்று ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை வரப்போகின்ற தேர்தலைக் காரணம் காட்டி எப்படியாவது நிறுத்திவிட வேண்டும் என்று சிலர் திட்டம் போட்டார்கள். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் அந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் உடைத்தெறிந்து, இன்று 5,000 ரூபாய் உரிமைத் தொகையை ஒரே தொகையாக அனைவரின் கணக்கிலும் அனுப்பி வைத்துவிட்டார். `திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த பிறகு மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாயாகக் கொடுபேன்’ என்ற உறுதிமொழியையும் கூறியிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

### கள்ளக்குறிச்சி திட்டங்கள்

இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கும் ஏராளமான திட்டங்களை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

உளுந்தூர்பேட்டை தாலூகாவில் சுமார் 200 ஏக்கரில் `சிப்காட் தொழிற்பேட்டை பூங்கா’ அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே



2,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சிப்காட் மூலமாக இன்று 2,000 பேருக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை சாலை, திருவண்ணாமலை - தியாகதுருகம் இணைப்புச் சாலை, கள்ளக்குறிச்சி - கூத்தாக்குடி சாலை, திருக்கோவிலூர்- ஆசனூர் சாலை ஆகிய சாலைகளெல்லாம் இன்று மேம்படுத்தப்பட்டு நான்கு வழிச் சாலை களாக உயர்த்தப்பட்டுள்ளன. இதற்கு மட்டும் 560 கோடி ரூபாய் நம் அரசு ஒதுக்கியிருக்கிறது.

### வெள்ளிமலை சின்னத் திருப்பதி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 168 கோடி ரூபாய் திட்டத்தில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. கல்வராயன் மலைப் பகுதியில் இருக்கக்கூடிய 22 கிராம மக்கள் பயனடைகின்ற வகையில், 100 கோடி ரூபாய் மதிப்பில் வெள்ளிமலைசின்னத் திருப்பதி இடையே 32 கிலோமீட்டர் தூரத்துக்குச் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சியில் 16 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது. 15 கோடி ரூபாய் மதிப்பில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு வருகிறது. இப்படி கள்ளக்குறிச்சிக்கு ஏகப்பட்ட திட்டங்களை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

இப்படியான திட்டங்கள் மூலமாகத்தான் இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு வளர்ந்து வருகின்ற மாநிலங்களில் முதல் மாநிலமாக, இரட்டை இலக்க வளர்ச்சியுடன், 11.19% வளர்ச்சியுடன் இன்று இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக நம் தமிழ்நாடு இடம் பிடித்திருக்கிறது.

இந்த வளர்ச்சியை இன்னும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்றுதான் நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார்.

### சுயஉதவி குழுச் சகோதரிகள்

இன்று ஆயிரக்கணக்கில் இங்கே சுய உதவி குழுக்களைச் சேர்ந்த எனது அருமை சகோதரிகள் வந்திருக்கிறீர்கள். இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல சகோதரிகள் குழுவின் மூலமாக வாழ்க்கையில் முன்னேறி இருக்கிறீர்கள். இன்று மற்றவர்களின் உதவிகளை எதிர்பார்க்காமல், உங்களின் சொந்தக் காலில் நீங்கள் உங்களின் குடும்பத்தை வழிநடத்துகிறீர்கள்.

இன்று குழுவைச் சேர்ந்த உங்கள் ஒவ்வொருவருக்கும் நம் அரசு உங்கள் பெயர் மற்றும் புகைப்படத்துடன் முதல்முறையாக அடையாள அட்டை கொடுத்திருக்கிறோம். இது வெறும் அடையாள அட்டை கிடையாது. உங்களின் அடையாளத்தையே மாற்றப் போகின்ற டூல் கிட். இதன் மூலமாக உங்களுக்கு நிறைய பயன்கள் உள்ளன. உங்களின் தயாரிப்புகளை, நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரைக்கும் 100 கிலோமீட்டர் தூரத்துக்கு அரசுப் பேருந்துகளில் எந்தவிதமான கட்டணமும் இன்றி நீங்கள் எடுத்துச் சென்று வியாபாரம் செய்யலாம். அதுமட்டுமல்ல அரசு நிறுவனங்களில் சலுகை விலையில் பல பொருட்களை நீங்கள் வாங்கலாம். ஆகவே இந்த அடையாள அட்டைகளை குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் நீங்கள் பாதுகாத்துப் பயன்படுத்தவும்.

### நம்பிக்கைத் தொகை

மகளிர் சுயஉதவி குழுக்களுக்குக் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வங்கிக்கடன் இணைப்புகளை நம் அரசு வழங்கியிருக்கிறது. இதையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய கடன்தொகையாகப் பார்க்கவில்லை, குழு சகோதரிகள் உங்களின் உழைப்பின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைத் தொகையாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் இதைப் பார்க்கிறார். இந்தக் கடன் இணைப்பைப் பெற்றுள்ள சகோதரிகள் உங்கள் அத்தனை பேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கலைஞர் கனவு இல்லம்

இங்கே வீட்டு மனைப்பட்டாக்களையும் வழங்க இருக்கிறோம். `சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியாது’ என்று சொல்வது போல, பட்டா இல்லாமல் வீட்டுக்கான உரிமையை நாம் பெற முடியாது. ஆகவே, இன்று உங்களின் கைகளில் நம் திராவிட மாடல் அரசு பட்டாக்களைக் கொடுத்து, உங்களின் உரிமையை நிலைநாட்டியிருக்கிறது. இந்நாளில் இருந்து உங்களின் வீடுகளில், நீங்கள் மகிழ்ச்சியாக, நிம்மதியாகத் தூங்கலாம். இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் நம் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் 25 லட்சம் பேருக்குப் பட்டாக்களை வழங்கியிருக்கிறார். இது மிகப்பெரிய சாதனை. குறிப்பாக, இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 41,000 பட்டாக்களை நம் அரசு வழங்கியிருக்கிறது. பட்டா பெற்ற அனைவருக்கும் எங்களின் வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். பட்டா மட்டுமல்ல, இன்று `கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஆணைகளும் வழங்கப்பட உள்ளன.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பது, ஒவ்வொரு மனிதனின் அத்தியாவசிய தேவை. இதைக் கழக அரசு உணர்ந்ததால்தான் இந்த மூன்றையும் உங்களுக்குப் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 3 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நம் தலைவர், முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் நம் திராவிட மாடல் அரசு 2.0 அமைந்த பிறகு, நான்கு ஆண்டுகளுக்குள் தமிழ்நாடு முழுவதும் 8 லட்சம் வீடுகளைக் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலமாக கட்டிக் கொடுப்போம் என்ற வாக்குறுதியை நம் அரசு சொல்லியிருக்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா குடும்பங்களுக்கும் ஒரு முகவரி கிடைக்க உள்ளது.

இந்த கள்ளக்குறிச்சி பகுதி மலைவாழ் மக்கள், பழங்குடியினர் நிறைந்த ஒரு பகுதி. அதனால் உங்களுக்கான திட்டங்களை நம் முதலமைச்சர் முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். முக்கியமாக பழங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதியில் சாலைகள், வீடுகள் என உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த `தொல்குடி’ திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

### உண்டு உறைவிடப் பள்ளி

ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் என நான்கு ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொல்குடி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியின் தரத்தை உயர்த்த விடுதிகளுக்கு 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இருளர், நரிக்குறவர் மக்களுக்குச் சிறு வணிகக் கடன் ரூபாய் 11 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலேயே முதல் மாநிலம்

இப்படி அரசின் திட்டங்களை நான் சொல்லிக்கொண்டே போகலாம். இங்கு மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகள் வந்திருக்கிறீர்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு என ஒரு தனித்துறையை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்று நம் முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளைக் கேட்கும் இடத்திலிருந்து கொடுக்கும் இடத்துக்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார். குறிப்பாக, உள்ளாட்சி அமைப்புகளில் நியமன அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நாமே நியமித்துள்ளோம். அதிகாரமற்றவர்களுக்கு அதிகாரம், உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு உரிமைகள் என, இப்படி எல்லா தரப்பு மக்களும் பயனடைகின்ற வகையில், நம் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

அடுத்து அமைய இருக்கக்கூடிய திராவிட மாடல் பார்ட்2 இல் நம் முதலமைச்சர் அவர்கள் இன்னும் ஏராளமான திட்டங்களை நிச்சயமாக உங்களுக்குத் தருவார். எனவே வருகை தந்துள்ள பயனாளிகள், பொதுமக்கள், மகளிர் உங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நம் அரசு எப்பொழுதுமே உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும்.

ஆகவே நீங்கள் எப்பொழுதும் நம் அரசுக்கு உறுதுணையாக, பக்கபலமாக இருக்க வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக் கொள்கின்றேன். வருகை தந்து நலத்திட்டங்களை எல்லாம் பெற்ற உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும், நிர்வாகத்துக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன், `வசந்தம்’ கார்த்திகேயன், மணிக்கண்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் பிரசாந்த் ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ரமேஷ்குமார் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

சமீபத்தில் த.வெ.க.வில் இணைந்த

## அ.தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் டி.பன்னீர் கழகத்தில் இணைந்தார்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

*சென்னை, மார்ச் 17 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் சமீபத்தில் த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த அம்மா பேரவை மாநில துணைச் செயலாளரும் புதுக்கோட்டை மாவட்ட மாணவர் அணி, அம்மா பேரவை துணைச் செயலாளருமான வழக்கறிஞர் டி.பன்னீர் தி.மு.க.வில் இணைந்தார்.*

*முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (16.3.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், சமீபத்தில் த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த அம்மா பேரவை மாநில துணைச் செயலாளரும் புதுக்கோட்டை மாவட்ட மாணவர் அணி, அம்மா பேரவை துணைச் செயலாளரும் - மாவட்ட முன்னாள் கவுன்சிலருமான வழக்கறிஞர் டி.பன்னீர் அவர்களும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் நல்லூர் சுப்பிரமணி, வீரம்பட்டி ராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*அதுபோது புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், விராலிமலை கிழக்குஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மண்டையூர் மகேந்திரன், துணை அமைப்பாளர் நல்லூர் ஸ்டாலின் (எ) அருள், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் கருப்பையா ஆகியோர் உடனிருந்தனர்.*

---

உடுமலை கொடைவள்ளல் கெங்குசாமி துணைவியார்

## திருமதி.ராஜலட்சுமி அம்மையார் மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 17-

உடுமலை கொடைவள்ளல் கெங்குசாமி அவர்களின் துணைவியார் மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

உடுமலை கொடைவள்ளல் நினைவில் வாழும் கெங்குசாமி அவர்களின் துணைவியார் திருமதி ராஜலட்சுமி அம்மையார் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எஸ்.வி.மில் குழுமத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

தமிழ்நாட்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) இன் தற்போதைய நிலை என்ன?

## கர்ப்பிணிப் பெண்களுக்கு பண உதவி சென்றடைவது உறுதி செய்யப்படுகிறதா?

### மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

*கள்ளக்குறிச்சி, மார்ச் 17-*

*கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-*

*தமிழ்நாட்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா JSY இன் தற்போதைய நிலை, என்ன ? கடந்த 3 ஆண்டுகளில் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எவ்வளவு? ( மாவட்ட வாரியாக) அதே காலகட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மாநிலத்தில் JSY க்காக விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் அளவு எவ்வளவு?*



*மாநிலத்திற்குள் JSY இன் கீழ் வசதி செய்யப்பட்ட நிறுவன விநியோகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?*

*குறிப்பாக நாட்டின் தொலைதூர மற்றும் சேவை செய்யப்படாத பகுதிகளில் உள்ள தகுதியுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு சரியான நேரத்தில் பண உதவி சென்றடைவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*

*மாநிலத்தில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு தாய் வழி சுகாதார சேவைகளை விரைவாக அணுகுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*

*இவ்வாறு தே. மலையரசன் கேள்வி எழுப்பினார்.*